MINISTRY OF FINANCE AND PLANNING

TTIP/PIM/04/03/9-1 2014.03.25

வியாபாரம் மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல : 01/(02)/2013

அமைச்சுக்களின் செயலாளர்கள்,

மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் அனைவருக்கும்,

**சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல்**

அரச சேவை, அரச கூட்டுத் தாபனங்கள் மற்றும் நியதிச் சபைகள் என்பனவற்றில் கடமையாற்றும் அலுவர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பில் வெளியிடப்பட்ட 2013.08.02 ஆந் திகதிய வியாபாரம் மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல : 01/2013 இல் 02.01 (இ) பிரிவானது கீழ் குறிப்பிடப்படுவதனைப் போன்று திருத்தியமைக்கப்படுகின்றது.

**02.** நிபந்தனைகள், நியதிகள் மற்றும் சலுகைகள்

02.01 நிபந்தனைகள் மற்றும் நியதிகள்

(இ) இம்முறைமையின் கீழ் மோட்டார் வாகனமொன்றினை இறக்குமதி செய்வதன் பேரில் நாணய கடிதம் ஒன்றினைத் திறந்த திகதி முதல் / உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றிற்காக ஆரம்ப கொடுப்பனவினை மேற்கொண்ட திகதி முதல் 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் மாற்றுத் தரப்பினருக்கு அதனை கைமாறுவதாயின், அக்கைமாற்றலினைப் பதிவு செய்யும் போது மேற்குறித்த சுற்றறிக்கையில் 02.01 (அ) 01 இல் குறிப்பிடப்படும் கா.கீ.கே (சீஐஎப்) பெறுமதியின் பேரில் 10% இனை மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருக்கு கைமாற்றல் பதிவுக் கட்டணமாக கைமாற்றம் செய்யும் நபரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

இந்நியதி 2014 மார்ச் மாதம் 26 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும்.

ஒப்பம் / பீ.பி ஜயசுந்தர,
திறைசேரிச் செயலாளர் மற்றும்
நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர்

பிரதிகள்:

1. ஜனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவைச் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கத் திணைக்களம்
6. ஆணையாளர் நாயகம் - மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்
7. ஆணையாளர் நாயகம் - உள்நாட்டு இறைவரித் திணைக்களம்.
8. பணிப்பாளர் நாயகம் - முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்